# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.30/2023** **நாள் : 11.04.2023**

**<u>கோடை காலத்தில் அனைத்து மாநகராட்சிப் பகுதிகளிலும் சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவதை மாநகராட்சி ஆணையர்கள் உறுதி செய்ய வேண்டும். மேலும், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.</u>**

**<u>மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் அறிவுறுத்தல்</u>**

இன்று 11.4.2023 மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் தலைமையில் அனைத்து மாநகராட்சிகளின் (சென்னை நீங்கலாக) ஆணையர்களுடன் மாநகராட்சிப் பகுதிகளில் செயல்படுத்தப்பட்டுவரும் வளர்ச்சிப் பணிகளின் நிலை குறித்த ஆய்வுக் கூட்டம் நகராட்சி நிருவாக ஆணையரக கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் சாலை அமைப்புப் பணிகள், பாதாள சாக்கடை திட்டப் பணிகள், மழைநீர் வடிகால் அமைப்புப் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் எந்தவித தொய்வுமின்றி மேற்கொள்வதை உறுதி செய்ய வேண்டும். கட்டிடங்களுக்கான அனுமதி வழங்குவது, சொத்து வரி விதிப்பது போன்ற பணிகள் விரைவுபடுத்தப்பட வேண்டும்.

அனைத்து மாநகராட்சிப் பகுதிகளிலும் கோடை காலத்தில் சீரான குடிநீர் வழங்குவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்ட மாநகராட்சி ஆணையாளர்கள் முனைப்போடு மேற்கொள்ள வேண்டும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியதன்படி நகர்ப்புறங்களில் உள்ள நீர்நிலைகளை மேம்படுத்தும் பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளப்பட வேண்டும். மாநகராட்சிப் பகுதிகளில் செயல்படும் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்களின் செயல்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும்.

மாநகராட்சிப் பகுதிகளில் அனைத்து வகையான வரி வசூல் பணிகள் எவ்வித தொய்வுமின்றி மேற்கொள்ள வேண்டும். கேளிக்கை வரி வசூல் பணிகளை தொடர்ந்து கண்காணித்திட வேண்டும். மாநகராட்சியில் மேற்கொள்ளப்படும் செலவினங்களை நிர்ணயிக்கப்பட்ட அளவிற்குள் வைப்பதற்குத் தேவையான நடவடிக்கையினை ஆணையர்கள் மேற்கொள்ள வேண்டும். தூய்மைப் பணியாளர்களின் வருகை மற்றும் அவர்களது நலன் குறித்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து மாநகராட்சி ஆணையர்களும் மாநகரப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையான சாலை வசதி, மழைநீர் வடிகால், குடிநீர்/கழிவுநீர் இணைப்பு வழங்குதல், தெரு விளக்குகள் அமைத்தல் உள்ளிட்ட பணிகளை நேரடியாக ஆய்வு செய்து எவ்வித குறைபாடுமின்றி நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் அனைத்து பணிகளையும் முடித்திட வேண்டும். வாராந்திர ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு அது தொடர்பான விவரங்கள் இயக்குநர், நகராட்சி நிருவாகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். மேலும், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.சிவ்தாஸ் மீனா, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத் தலைவர் / மேலாண்மை இயக்குநர் டாக்டர். எஸ். ஸ்வர்ணா, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன தலைவர்/மேலாண்மை இயக்குநர் திரு.ஆர்.அம்பலவாணன், IAAS., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.வி.தட்சிணாமூர்த்தி, இ.ஆ.ப., இயக்குநர், பேரூராட்சிகள் திரு.கிரண் குராலா, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக இயக்குநர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., நகராட்சி நிருவாக இணை இயக்குநர் திரு.பி.விஷ்ணு சந்திரன், இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய இணை மேலாண்மை இயக்குநர் திரு.வி.சரவணன், இ.ஆ.ப., அனைத்து மாநகராட்சி ஆணையாளர்கள் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்